முருகப்பெருமான் துணை

**மகான் அங்காரக பகவானை தொடர்ந்து**
**மகான் குருபகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.06.2021, வியாழக்கிழமை

1. கலித்துன்பம் போக்க வந்த
   கந்தனே ஆறுமுக அரங்கனே
   அழியாமை தந்து மீட்கும்
   அரங்கமகா ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் பிலவ மிதுனதிங்கள்
   ஆசிபட தச திகதி குரு வாரம்
   (பிலவ வருடம் ஆனி மாதம் 10ம் நாள், 24.06.2021 வியாழக்கிழமை)
   அறிவிப்பேன் குருபகவான் யானும்
3. யானும் யோகபிரசன்ன ஆசியை
   உலகோர் நலம் பெற உரைப்பேன்
   தான தரும பலத்தை கொண்டே
   தரணிகாக்க அருள் புரியும் குரு
4. குருவரங்கன் உண்மை வழிகளை
   குவலயத்தார் ஏற்று வருக
   பெருமை மிக்க மாற்றங்களை
   பேருலகம் அடைந்து சிறக்கும்
5. சிறக்கவே தனித்துவம் மிக்க
   சிறப்பறிவு ஊட்டும் அரங்கன்
   அறத்தின் கொள்கைகள் தன்னை
   அகிலம் வேதமாக ஏற்றுத்தொடர
6. தொடரவே பாதுகாப்பு மிக்க
   தூய ஞான உலகம் ஆகும்
   இடர் என்பதே அனுகாதபடி
   இந்த உலகம் அமைதி காணும்
7. காணவே உலக மக்கள்
   கந்தப்பெருமான் வழிபாட்டை
   ஞானமாக மக்கள் செய்து
   நாளும் அன்னதானம் தொடர
8. தொடரவே தரும பலம்தானும்
   தெய்வ சக்தியாக மாறியே
   இடர்வெல்லும் ஞானத்தலைமை
   ஏழ்மை விரட்டும் தயவான தலைமை

9. தலைமை அரங்க ஞானிவழி
தரணியெங்கிலும் அமைந்துமே
ஊழல் இல்லாத ஆளுமையாக
உண்மை ஞான ஆட்சியாக மாறும்

10. மாறுதலை மண்ணுலகம் பெற
மாதவம் செய்து வந்த ஞானி
ஆறுதல் பெற்ற மக்களும் தேசமும்
அச்சுறுத்தும் நச்சுக்கிருமி வழி

11. வழியான உயிர்பலி நீக்கி
வலுவிழக்கச் செய்துமே
அழியாமை தந்து மீட்பும்
ஆறுமுகன் ஞான ஆட்சி மலரும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–